# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:156** **தேதி:19.07.2014**

**JAC போராட்ட அறைகூவல்**

**07.08.2014 அன்று அட்டை அணிந்து ஆர்ப்பாட்டம் என கோரிக்கை தினம் கடைபிடித்தல்**

**நிர்வாகமே அனைத்து தொழிற்சங்கங்களும் உள்ளடக்கிய JACயின் 30 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்று!**

அன்பார்ந்த தோழர்களே,

நமது 30 அம்ச கோரிக்கைகளின் மீது 27.06.2014 அன்று நிர்வாகம் JACயுடன் பேச்சு வார்த்தை நடத்தி பல பிரச்சனைகள் மீது தீர்வு காண்பதாக ஏற்றுக் கொண்டது. JACயின் கூட்டம் 17.07.2014 அன்று JACயின் தலைவர் தோழர் சந்தேஸ்வர் சிங் அவர்களின் சகோதரர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த காரணத்தால் JACயின் இணை அமைப்பாளர் தோழர் K.ஜெயபிரகாஷ் தலைமையில் BSNL MS அலுவலகத்தில் நடைபெற்றது. 27.06.2014 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையில் JAC வரக்கூடாது என்ற நிலையினை மேற்கொண்ட GM(SR) அவர்களின் முயற்சிகளுக்கு வருத்தத்தை பதிவு செய்த இந்தக் கூட்டம், அந்தக் கூட்டத்தின் நிகழ்வுகள் தொடர்பான நிர்வாகத்தின் MINUTES தவறாக வெளியிடப் பட்டதற்கு தனது எதிர்ப்பையும் பதிவு செய்தது. மேலும் கூட்டத்தில் எடுக்கப்பட்ட சில முடிவுகளுக்கு மாறான விஷயங்களையும் அதில் வெளியிட்டிருப்பது என்பது, ஊழியர்களின் நியாயமான பிரச்சனைகளை அமைதியான பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்வு காண்பதில் நிர்வாகம் அக்கறை காட்டவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது. மேலும் விவாதித்த பிரச்சனைகளில் எந்தவிதமான முன்னேற்றம் இலை என்பதை கணக்கில் எடுத்துக் கொண்ட இந்த JAC கூட்டம் கீழ்கண்ட முடிவுகளை மேற்கொண்டது:-

1) 07.08.2014 அன்று நாடு முழுவதும் ஊழியர்களால் கோரிக்கை தினம் கடைபிடிப்பது. அன்றைய தினம் ஊழியர்கள் கோரிக்கை அட்டையை அணிந்து மதிய உணவு இடைவேளையில் ஆர்ப்பாட்டம் நடத்துவது.

2) ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகள் விரைவாக தீர்வு காணப்படவில்லை எனில் ஒரு கடுமையான போராட்டங்கள் நடத்தப்படும் எனும் எச்சரிக்கையே மேலே சொல்லப்பட்ட போராட்டம். JACயின் அடுத்தக் கூட்டம் 11.08.2014 அன்று மாலை 4 மணி அளவில் BSNL MS அலுவலகத்தில் நடைபெறும். அனைத்து சங்கங்களின் பொது செயலாளர்களும் தவறாமல் கலந்துக் கொள்ள வேண்டும்.

3) அனைத்து மாநிலம் மற்றும் மாவட்டங்களிலும் JAC உருவாக்கப்பட வேண்டும் என ஏற்கனவே JAC எடுத்த முடிவினை இந்தக் கூட்டம் மீண்டும் வலியுறுத்தியது. மாநில மாவட்ட மட்டங்களில் JAC உருவாக்கவும், சுமுகமாக நடைபெறவும், அனைத்து சங்கங்களையும் ஒன்று படுத்துவதிலும், தகவல் தெரிவிப்பதிலும் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு சங்கங்களான BSNL ஊழியர் சங்கமும், NFTE சங்கமும் பெரும்பங்காற்ற வேண்டும் என அழுத்தமாக தெரிவிக்கப்பட்டது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(ச.செல்லப்பா)

மாநில செயலாளர்